**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 106 of 2019

Depositions of DW - 4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சுதா

Father's Name : சுப்ரமணியம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of July** 2025.

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது நீலாம்பூரில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். இவ்வழக்கின் எதிரி ராஜேஷ்குமார் என்பவரை எனது தந்தை மூலமாக சுமார் 12 வருடங்களாக தெரியும். எனது தந்தைக்கும் எதிரி ராஜேஷ்குமாருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எத்தனை வருடங்களாக வரவு செலவு இருந்தது குறித்து எனக்கு தெரியாது. ராஜேஷ்குமார் என்பவர் எனது தந்தையிடம் பணம் கேட்டுள்ளார். எனது தந்தை ராஜேஷ்குமாரை எனக்கு அறிமுகம் செய்து வைத்து என்னிடம் இருந்து பெற்று ராஜேஷ்குமாருக்கு கொடுத்தார்.

2. நான் 2013 லிருந்து 2017 வரை பல தவணைகளில் ரூ.15 லட்சம் வரை எனது தந்தை மூலமாக இவ்வழக்கின் எதிரி ராஜேஷ்குமார் அவர்களுக்கு கொடுத்துள்ளேன். நான் பணம் கொடுத்ததற்கு ஆதரவாக ராஜேஷ்குமாரிடமிருந்து இரண்டு காசோலைகள், பழனியில் (திண்டுக்கல் மாவட்டம்) உள்ள ராஜேஷ் என்பவருடைய சகோதரர்

விஜயகுமார் என்பவர் பெயரில் உள்ள சொத்தின் அசல் பத்திரத்தை என்னிடம் அளித்தார். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் சொத்தின் ஆவண எண்.1874/2017 அசல் ஆவணத்தை தான் என்னிடம் ராஜேஷ்குமார் அளித்துள்ளார். தற்பொழுது அசல் என் வசம் உள்ளது. அதை தவிர்த்து வேறு எந்த ஆவணம் ராஜேஷ்குமார் அளிக்கவில்லை.

3. என்னிடம் வாங்கிய பணத்திற்கு மாதம் ரூ.1 வட்டி வீதம் பேசப்பட்டது. எதிரி ராஜேஷ்குமார் வட்டி மாதம் சரியாக செலுத்தமாட்டார். அவரிடம் உள்ளதாக ரூ.5 ஆயிரம், ரூ.6 ஆயிரம் மட்டுமே தருவார். மொத்தமாக எவ்வளவு வட்டியாக செலுத்தியிருப்பார்என சரியாக தெரியவில்லை. வரவு, செலவுகள் அனைத்தும் எனது தந்தை கவனித்துவந்தார். எனது தந்தை 2017 ம் ஆண்டு இறந்துவிட்டார். இறப்பின்போது ரூ.20 ஆயிரம் என்னிடம் ராஜேஷ்குமார் கொடுத்தார். எனக்கு வட்டி மற்றும் அசல் திரும்ப தராததால் நான் ராஜேஷ்குமாரிடம் கொடுத்த தொகையை திரும்ப கேட்டேன். ராஜேஷ்குமார் தற்பொழுது முழுதொகையும் என்னால் தரஇயலாது. சிறிது சிறிதாக தந்து விடுவதாக தெரிவித்தார்.

4. V.சின்னசாமி, K.சின்னசாமி ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் ராஜேஷ்குமார் மற்றும் V.சின்னசாமி, K.சின்னசாமி ஆகியோர்களை அழைத்துகொண்டு சென்று உறுதிமொழிபத்திரம் ஒன்று எழுதி கொண்டோம். நான் மற்றும் V.சின்னசாமி, K.சின்னசாமி ஆகியோர்களுக்கு தரவேண்டிய பணத்தை எனக்கு தரவேண்டிய ராஜேஷ்குமார் தந்துவிடுவதாக எழுதி கொண்டோம். மேற்கூரிய ஈடுபத்திரம் மாதம் ரூ.1/-க்கு ரூ.100/-க்கு வட்டி 1.5 வீதம் இரண்டு ஆண்டு கெடு அளித்து ஆவண எண். 1874/2017 சார்பதிவாளர் அலுவலகம், இணை சார்பதிவாளர் அலுவலகம் 2, பழனியில் பதிவு செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்கூரிய ஆவணத்தின் அசல் என் வசம் உள்ளது.

5. நான் 2012 ம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை சீட்டு நடத்தியுள்ளேன். 2017 ம் ஆண்டு எனக்கு சீட்டு செலுத்தவேண்டிய 10 நபர்கள் பணம் தராமல் ஏமாற்றி விட்டார்கள். ஆகவே எனக்கு நிதியிழப்பு ஏற்பட்டது. பணம் செலுத்திய அனைவரும் என்னிடம் பணம் கேட்டு வந்தார்கள். நான் எனக்கு பணம் செலுத்தவேண்டிய பொறுப்பு, நான் திரும்ப செலுத்தவேண்டிய கடமைபட்டவர்கள் அனைத்து பொறுப்பையும் V.சின்னசாமி, K.சின்னசாமி அவர்களிடம் என்னுடைய வீடு, காடு, அனைத்தையும் அவர்கள் பொறுப்பில் விற்று நான் கோவை நீலாம்பூருக்கு வந்துவிட்டேன்.

6. முழு பிரச்சனைக்கும் கொள்ளுபாளையம் லட்சுமி நகரை சேர்ந்த கங்கை என்பவர் தான் காரணம். இவ்வழக்கின் புகார்தாரர் சீனிவாசன் என்பவர் எங்கள் ஊரை சேர்ந்தவர், அதை தவிர்த்து வேறு எந்த விபரமும் எனக்கு அவரை பற்றி தெரியாது. V.சின்னசாமி, K.சின்னசாமி, கங்கை, சீனிவாசன் ஆகியோர்களுக்கு என்ன உறவு என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் கொள்ளுபாளையத்தினை சேர்ந்த ரமேஷ் என்பவர் பணம் தரவேண்டும் என்று கோவை நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. என் மீது இரண்டு காசோலை வழக்குகள் நிலுவையில் உள்ளது. ராஜேஷ்குமார் என்னிடம் கொடுத்த காசோலை தற்பொழுது வரை என்னிடம் தான் உள்ளது. நான் கொள்ளுபாளையத்தில் இருந்த வீட்டில் இருந்த அனைத்து பொருட்களும் நானாக விட்டு கோவை வந்துவிட்டேன்.

நான் ராஜேஷ்குமார் கொடுத்த காசோலை மற்றும் ராஜேஷ்குமாரின் தம்பி விஜய்குமார் கொடுத்த அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய தாயாராக உள்ளேன்.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.07.18 20:35:30 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**